**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.100/2021**

**2025 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 17 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெரால்டு செல்வநாதன் | ஜாதி | : | |
| த.பெ | : | சம்மனசு | தொழில் | : | தனியார் பணி |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 42/2025 |

தேதி : 17.02.2025

**4,5** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை
தாவா சொத்துக்கள் மாங்குடி இருதயம் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். இருதயத்துக்கு அந்தோணி, மரியபுஸ்பம், சந்தியாகு அம்மாள், ஜெர்மன் மற்றும் மரியசூசை வாரிசுகள் என்றால் சரிதான். எனவே அந்தோணி என்பவருக்கு தாவா சொத்தில் 5 இல் 1 பாகம் உள்ளது என்றால் சரிதான். அந்தோணிக்கு 6 மக்கள் என்றால் சரிதான். எனவே அந்தோணியின் மகள்களான 4,5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் 30 இல் 1 பாகம் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

**18, 19** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை
வழக்கு சொத்து மாங்குடி இருதயத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மாங்குடி இருதயத்திற்கு அந்தோணி, மரியபுஸ்பம், சந்தியாகு அம்மாள், ஜெர்மன் மற்றும் மரியசூசை ஆகியோர் நேரடி வாரிசுகள் என்றால் சரிதான். 1வது பிரதிவாதி சம்மனசு என்பவரின் மனைவி தான் 19 வது பிரதிவாதி ஆலிஸ் இருதயமேரி என்றால் சரிதான். சம்மனசு என்பவரின் மகள்தான் 18 வது பிரதிவாதியான சர்மிளா ஜெயராணி என்றால் சரிதான். மாங்குடி இருதயம் என்பவரின் வாரிசுகளுக்கு தாவா சொத்தில் 5 இல் 1 பாகம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தின் 1/5 பாகத்தில் 4,5 பிரதிவாதிகளுக்கு தாலா 30 இல் 1 பாகம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மரியபுஸ்பத்தின் மகள் 19 ஆம் பிரதிவாதியான ஆலிஸ் இருதயமேரி என்றால் சரிதான். அவர்களது பாகத்தை கொடுப்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

18 ,19 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காகவும் மற்றும் 2, 3, 10, 11 மற்றும் 13 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காகவும் ஒத்திவைக்கப்படுகிறது

**Sd/.Thiru.P.Jaisankar**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.